| சாட்சி : DW 1<br>ராஜகோபால் | அ.வ.எண். 58/2005 | 27.01.2025 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u>

1) ஆரம்பகாலத்தில் எனக்கு ராஜரெத்தினத்திற்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். 1ம் வாதி மருதமுத்து என்பவரை தாவா சொத்தில் அமர்த்தியிருந்தோம் என்பது தவறானது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1ம் வாதியை தாவா சொத்தில் அமர்த்திருந்தார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். 1ம் வாதி தாவா சொத்தில் எப்படி வந்தார் என்றால் தாவா சொத்தில் தண்ணீர் பிடிக்க எங்களிடம் வந்து சாவியை வாங்கி கொண்டார், திருவிழா சமயத்தில் நாங்கள் மீண்டும் சாவியை பெற்றுக்கொண்டோம். ஆதியில் 1ம் வாதியை தாவா சொத்தில் தண்ணீர் பிடிக்க வைத்தது 1ம் பிரதிவாதி என்றால் இல்லை. நானும் தாவா சொத்தில் 1ம் வாதியை வைக்கவில்லை என்றால் சரிதான்.

2) 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி 2ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்றால் எங்கள் சொத்திற்கு வாதிகள் வரக்கூடாது என்று தான் போட்டுள்ளார். மேற்படி 2ம் பிரதிவாதி என்ன கட்சி எழுதி தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாம் நான் வழக்கிற்காக தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கும், 1ம் வாதிக்கும் இடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் நியமனம் செய்து வழக்கு நடத்தி 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் 2005 முதல் வழக்கு நடத்தி வருகிறேன்.

3) 2005 முதல் சுமார் 10 ஆண்டுகள் வழக்கில் எதிர்வழககுரை தாக்கல் செய்யாததற்கு எந்த சிறப்பான காரணமும் இல்லை என்றால் சரிதான், 2005 ல் வழக்கை திரும்ப நடத்த வேண்டும் என்று நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். இந்த வழக்கில் எனக்கு நலனோ அக்கறையோ இல்லை என்ற காரணத்தினால் தான் 2005 முதல் நான் இந்த வழககில் 10 ஆண்டுகளுக்கு மேல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞரை வைத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்துள்ளேன். அ.வ.எண்.55/2016 என்ற வழக்கை இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிகள் சட்டப்படி தாவா சொத்தில் இருந்து காலி செய்யவேண்டும் என்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) 2ம் பிரதிவாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.11 ஆவணம் நடைமுறைக்கு வந்ததா என்பதை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் பாக்கியத்தம்மாள் எழுதி வைத்த ஆவணத்தை பாக்கியத்தம்மாள் ரத்து செய்துவிட்டார், வழக்கு நடத்தி தான் தாவா சொத்து எங்களுக்கு கிடைத்தது. மேற்படி விபரத்தை அ.வ.எண்.55/2016 வழக்கிலும் இந்த வழக்கிலும் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் தலைவர் விஷ்வகர்ம மகாஜன சங்க சத்திரம் உள்ளதா என்றால் உள்ளது, இதற்கு முன்பு 1ம் பிரதிவாதி பெயரில் இருந்தது. மேற்படி 1ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் போது தான் 1ம் வாதி தாவா சொத்திற்குள் வந்தார் என்றால் இல்லை.

5) எனது கட்சிப்படி சங்கமா சத்திரமா என்றால் சங்க சத்திரம் ஆகும், டிரெஸ்ட் இல்லை. இந்த வழக்கு நிலுவியல் இருக்கும் போது ச.கண்ணனூர் பேரூராட்சி அலுவலர்களை சரிகட்டி பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான ரசீதுகளை வாங்கும் போது வாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை எனது சொத்தை பொறுத்து அறிவிப்பு கொடுக்க அவசியம் இல்லை. தாவா சொத்து எனது தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும் வழக்கிற்காக என்னுடைய சொத்து என்று பெய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது அத்தை வீட்டு சொத்தாகும். எனது அத்தை பெயர் பாக்கியத்தம்மாள் ஆகும். மேற்படி பாக்கியத்தம்மாள் எனது அத்தை என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் எதுவும் இல்லை என்றால் நான் சொல்லியுள்ளேன்.

6) எனது அத்தை பாக்கியத்தம்மாள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் அங்கு யாருக்கும் பட்டா கிடையாது, கருப்பண்ணசாமி கோவிலில் இருந்து காய்கறி சத்திரம் வரை யாருக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை மேற்படி கருப்பண்ணசாமி கோவில் முதல் காய்கறி சத்திரம் கிழக்கு புறத்தில் இருந்து மேற்கு புறம் வரை உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் ரத உட்சவம், 9ம் நாள் திருவிழா ஆகிய வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் கதவு எண் மற்றும் சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான், அந்த இடத்தில் அன்னதானம் கொடுத்தல் சம்மந்தமாக பி.வா.சா.ஆ.15 கொடுத்துள்ளார்கள்.

7) நான் தலைவர் என்பதற்காகஆணையர் அலுவலகத்தில் இருந்து சான்றிதழ் வாங்கியுள்ளோனா என்றால் இல்லை, எனது தாத்தா செய்து கொண்டிருந்தார் அதை தொடர்ந்து நாங்கள் செய்து வருகிறோம். எனது தாத்தா செய்து வந்தார் என்பதை பொறுத்து நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் பின்பக்கம் நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான், நிரப்பப்படாமல் தான் வழங்குவார்கள். நான் உரிய ஆயத்தில் இருந்து பி.வா.சா.ஆ.15 ஆவணத்தை வாங்கி தாக்கல் செய்யாதா காரணத்தினால் தான் அதன் பின்பகுதி நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல.

8) பி.வா.சா.ஆ.16 ஆவணம் தாவா சொத்தை பொறுத்த வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ஆவணம் நாங்களாக எங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட தீர்மானம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் மருதமுத்து அல்லது கமலா தரப்பினர் இல்லை என்றால் சரிதான். திருச்சி உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 740/1973 வழக்கில் கருப்பண்ணசாமி கோவிலையோ, சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோவில் நிர்வாகத்தையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை பார்த்தால் தான் மேற்படி தீர்ப்பு எந்த சர்வே எண்ணை பொறுத்தது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். பாக்கியத்தம்மாளுக்கும், பத்திர எழுத்தர் ராஜராம்க்கும் சுமூகமான உறவு இருந்தா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் பாக்கியத்தம்மாள் ராஜாராமிற்கு எழுதி வைத்தார் என்றால் முதலில் பாக்கியத்தம்மாள் ராஜரெத்தினத்திற்கு எழுதிவைத்தார், மேற்படி ராஜரெத்தினம் பாக்கியத்தம்மாளை வெளியே செல்லும்படி

சொல்லியதால் பாக்கியத்தம்மாள் ராஜராமிற்கு எழுதி வைத்தார். அ.வ.எண்.740/1973 என்ற வழககில் பாக்கியத்தம்மாள் மீது யார் தாக்கல் செய்தார் என்றால் குமாரசாமிஆசாரி தாக்கல் செய்தார்.

9) மேற்படி பாக்கியத்தம்மாளும், குமாரசாமியும் உறவினரா என்றால் இருவரும் சகோதர சகோதரி ஆவார்கள். இனாம் சொத்து ஏமாற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக மேற்சொன்ன நபர்கள் வஞ்சககூட்டணியாக மேற்படி பி.வா.சா.ஆ.18 தீர்ப்பு பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் தான் பாக்கியத்தம்மாளோ அவரது வகையறாவோ எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதிலும் 1ம் வாதி 1ம் பிரதிவாதியுடன் ஏற்பட்ட வாடகை ஒப்பந்தப்படி வாடகைதாரராக வந்தார் என்றால் தாவா சொத்தின் ஒரு பகுதிக்கு தான் வந்தார்.

10) அ.வ.எண்.55/2016 வழக்கில் தாவா சொத்து முழுவதையும் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் தற்போது முன்னுக்கு பின் முரணாக ஒரு பகுதியில் மட்டும் தான் இருக்கிறார்கள் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, மற்ற பகுதிகள் காலி இடமாக தான் உள்ளது. மொத்த சொத்தும் கிழமேல் மற்றும் தென்வடல் எவ்வளவு என்று தெரியாது என்றால் சரிதான், மூன்று அயிட்டங்களாக உள்ளது. தாவா சொத்தில் 4ம் வாதி கெட்டி கட்டிடம் கட்டியுள்ளாரா என்றால் இல்லை, நாங்கள் தான் கட்டியுள்ளோம். மேற்படி கெட்டி கட்டிடம் கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு அடி என்று அளந்து பார்த்தேனா என்றால் கிழமேல் 35 அடி, தென்வடல் 45 அடி ஆகும். மேற்படி கெட்டிகட்டிடம் எந்த தேதி மாதம் வருடம் கட்டினேன் என்றால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கட்டினேன்.

11) மேற்படி கெட்டி கட்டிடம் கட்டியதை பொறுத்து எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லாததற்கு எந்த காரணமும் இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் எந்த கெட்டி கட்டிடமும் கட்டிவில்லை என்றாலும் 4ம் வாதி தான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் ஏற்பட்ட வாய்மொழி ஒப்பந்தத்தின்படி மருதமுத்து பேரூராட்சியில் வரி செலுத்தி வந்தார் என்றால் 1ம் பிரதிவாதி இருக்கும் வரை 1ம் பிரதிவாதி செலுத்தினார் அதற்கு பின்னிட்டு நான் செலுத்துகிறேன்.

12) மேற்படி 1ம் வாதி தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்காக வரி செலுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதி வரி எதுவும் செலுத்தவில்லை, 2007 வரை 1ம் பிரதிவாதி செலுத்தினார், அதன் பிறகு நான் செலுத்தினேன். வாதிகள் தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகளை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு தாவா சொத்தில் எந்த நலனும் அக்கறையும் இல்லாத காரணத்தினால் தான் வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்கள் எதையும் நான் வாங்கி பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் விஷ்வபிரம்மா பிராமண பொது தண்ணீர் பந்தல் டிரெஸ்டில் தற்போதைய தலைவர் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்படி டிரெஸ்ட் சொத்து இல்லை என்றால் சரிதான், பாக்கியத்தம்மாளின் சொத்தாகும் அதை எங்களுக்கு கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2008 ல் இறந்தார். மேற்படி 1ம் பிரதிவாதியின் இறப்பு சடங்கில் நான் கலந்துகொண்டேனா என்றால் கலந்துகொண்டேன். 1ம் பிரதிவாதி, நானும் சுமூகமான உறவில் இருந்துவந்தோம் என்றால் சரிதான், அவர் எனக்கு மாமன் உறவுமுறைஆவார்.

13) நான் சட்டவிரோதமாக வாதிகளை காலி செய்ய முயற்சித்த காரணத்தினால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தற்போது வரை தாவா சொத்தில் சாமி இறக்கிக்கொண்டு தான் இருக்கிறேன். நாங்கள் சாமி இறக்குவதற்கு வாதிகள் தரப்பில் எந்த விதமான ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகளை சட்டப்படியேயன்றி காலி செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான், சட்டப்படி தான் காலி செய்கிறேன். மேற்படி உண்மை விபரங்கள் தெரிந்தும் பொய்யாக இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்றாலும் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.